வகுப்பு - 7 பருவம் - 2 புவியியல் 3. வளங்கள்

**பயிற்சி வினாக்கள்:**

1. மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவை _______.

   (1) விலங்குகள் (2) வளங்கள் (3) பயிர்கள் (4) பறவைகள்

2. கூற்று: புதை படிம எரிபொருள்கள், உயிரியல் வளங்களுள் அடங்கும்.

   காரணம்: உயிரியல் வளங்கள் என்பவை காடுகள், பயிர்கள், பறவைகள், விலங்குகள், மனிதன் அடங்கிய உயிர்க் கோளத்திலிருந்து பெறப்பட்ட வளங்கள் ஆகும்.

   (1) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது.

   (2) கூற்று மற்றும் காரணம் சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

   (3) கூற்று தவறு, காரணம் சரி.

   (4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

3. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

   (1) புதுப்பிக்கத்தக்க வளம் - சூரிய ஒளி, காற்று ஆற்றல், நீர் ஆற்றல்

   (2) புதுப்பிக்க இயலாத வளம் - காற்று ஆற்றல்

   (3) உயிரியல் வளம் - தங்கம், வெள்ளி

   (4) உயிரற்ற வளம் - இயற்கை வாயு

4. 'கமுதி' சூரிய ஒளி மின்சக்தி திட்டமானது எங்கு, எப்போது நிறைவேற்றப்பட்டது?

   (1) இராமநாதபுரம் செப்டம்பர் 2016 (2) கடலூர் ஆகஸ்ட் 2016

   (3) சென்னை செப்டம்பர் 2017 (4) பாண்டிச்சேரி ஆகஸ்ட் 2017

5. பொருத்துக:

   காற்றாலைப் பண்ணைகள் மாவட்டம் (மாநிலம்)

LIVEWORKSHEETS

i. முப்பந்தல் - a) தாமன் ஜோதி (ஒடிசா)

ii. பிரமன்வேல் - b) சங்கி (மகாராஷ்டிரா)

iii. தால் கான் - c) கன்னியாகுமரி (தமிழ்நாடு)

iv. தாமன் ஜோதி - d) துலே (மகாராஷ்டிரா)

(1) i - d ii - c iii - b iv - a (2) i - c ii - d iii - a iv - b

(3) i - b ii - c iii - d iv - a (4) i - c ii - d iii - b iv - a

6. உலகில் அதிக அளவில் நீர் மின்சக்தி உற்பத்தி செய்யும் நாடு ______.

(1) இந்தியா (2) சீனா

(3) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (4) கனடா

7. பொருத்துக:

அணை மாநிலம் (மெகாவாட்)

i. தெகிரி அணை - a) தமிழ்நாடு (120 மெகாவாட்)

ii. ஸ்ரீ சைலம் அணை - b) உத்ரகாண்ட் (2400 மெகாவாட்)

iii. மேட்டூர் அணை - c) கேரளா (780 மெகாவாட்)

iv. இடுக்கி அணை - d) ஆந்திரபிரதேசம் (1670 மெகாவாட்)

(1) i - d ii - a iii - b iv - c (2) i - b ii - d iii - c iv - a

(3) i - b ii - d iii - a iv - c (4) i - d ii - a iii - c iv - b

8. பொருத்துக:

திட்டத்தின் பெயர் நாடு (நதி)

i. துக்குருயி அணை - a) பிரேசில் மற்றும் பராகுவே (பரானா)

ii. குரி அணை - b) சீனா (யாங்ட்ஸி)

iii. த்ரிகார்ஜஸ் அணை - c) வெனிசுலா (கரோணி)

iv. இட்டைப்பு அணை - d) பிரேசில் (டெகான்டின்ஸ்)

(1) i - d ii - a iii - c iv - b (2) i - d ii - c iii - b iv - a

LIVEWORKSHEETS

(3) i - b ii - c iii - a iv - d (4) i - d ii - c iii - a iv - b

9. தவறான இணையைக் கண்டறிக.

(1) ஸ்ரீசைலம் அணை - ஆந்திரபிரதேசம்

(2) சர்தார் சரோவர் அணை - குஜராத்

(3) கொய்னா அணை - மகாராஷ்டிரா

(4) ஜிலுடு அணை - உத்ரகாண்ட்

10. மனிதனால் முதலில் அறியப்பட்டு, பயன்படுத்தப்பட்ட உலோகங்களில் ஒன்று

(1) இரும்பு (2) தாமிரம் (3) தங்கம் (4) வெள்ளி

11. புவியின் மேலோட்டில் இரும்பு எத்தனையாவது உலோகமாகக் காணப்படுகிறது?

(1) நான்கு (2) ஐந்து (3) ஒன்று (4) ஒன்று

12. கூற்று 1: புவி மேலோட்டின் பாறைகளில் காணப்படும் மேக்னடைட் மற்றும் ஹேமடைட் தாதுக்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன.

கூற்று 2: எஃகு உற்பத்தியில் மூலப்பொருள் இரும்புத்தாது மற்றும் 98% இரும்புத்தாது பிரித்தெடுக்கப்பட்டு எஃகு தயாரிக்கப்படுகிறது.

(1) கூற்று 1 சரி, 2 தவறு (2) கூற்று 2 சரி, 1 தவறு.

(3) கூற்று 1 மற்றும் 2 சரி (4) கூற்று 1 மற்றும் 2 தவறு.

13. உலகின் மொத்த இரும்பு உற்பத்தியில் 85% எந்த நாடுகளிலிருந்து கிடைக்கின்றன அவற்றை வரிசைப்படுத்துக.

(1) சீனா, ஆஸ்திரேலியா, பிரேசில், இந்தியா, ரஷ்யா

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, பிரேசில், பிரான்ஸ், இந்தியா

(3) ஜெர்மனி, ரஷ்யா, சீனா, இத்தாலி, டென்மார்க்

(4) ஆஸ்திரேலியா, ஜப்பான், நார்வே, டென்மார்க்

14. தமிழகத்தில் இரும்புத்தாது கிடைக்குமிடம் ______.

(1) ஆனைமலை (2) கஞ்சமலை (3) நீலகிரி (4) பச்சை மலை

LIVEWORKSHEETS

15. இந்திய நாட்டின் மொத்த இருப்பில் 95% இரும்பு தாதுக்கள் கிடைக்கும் மாநிலங்களை வரிசைப்படுத்துக.

(1) ஜார்கண்ட், ஒடிசா, மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், கர்நாடகா, கோவா

(2) தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, சட்டீஸ்கர், குஜராத்

(3) ஜம்மு காஷ்மீர், ஹிமாச்சலப் பிரதேசம், உத்திரகாண்ட், உத்திர பிரதேசம், ஹரியானா, பஞ்சாப்

(4) மேற்கு வங்கம், பீகார், ராஜஸ்தான், டெல்லி, அருணாச்சல பிரதேசம், மேகாலயா

16. கூற்று (i): தாமிரம், மனித நுகர்வில் மூன்றாவது இடத்தினைப் பெறுகிறது.

கூற்று (ii): தாமிரமானது, வெப்பம் மற்றும் மின்சாரத்தினை எளிதில் கடத்தக் கூடியது.

கூற்று (iii): தாமிரத்தின் 3/4 பங்கானது மின்சாரக் கம்பி வடங்கள், தொலைத் தொடர்பு கேபிள்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் தயாரிப்பதற்கு பயன்படுகிறது.

கூற்று (iv): தாமிர உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முதலிடம் வகிக்கிறது.

(1) கூற்று (i), (ii), (iii), (iv) சரி

(2) கூற்று (i), (ii), (iii), (iv) தவறு

(3) கூற்று (i), (ii), (iii) சரி (iv) தவறு

(4) கூற்று (i), (iii), (iv) சரி (ii) தவறு

17. பல் மருத்துவத்தில் பயன்படும் உலோகங்கள் எவை?

(1) தங்கம், வெள்ளி

(2) பாக்ஸைட், அலுமினியம்

(3) இரும்பு, மாங்கனீசு

(4) மைக்கா, தாமிரம்

18. உலகில் அதிக அளவில் தங்கம் உற்பத்தி செய்யும் நாடு ______.

(1) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(2) சீனா

(3) ஆஸ்திரேலியா

(4) இந்தியா

19. உலகளவில் தங்கம் இருப்பு அதிகம் உள்ள நாடு ______.

(1) ஆஸ்திரேலியா (2500 டன்)

(2) இந்தியா (4500 டன்)

LIVEWORKSHEETS

(3) கனடா (3500 டன்) (4) சீனா (1500 டன்)

20. 'கோலார் தங்க வயல்' அமைந்த மாநிலம் எது?

(1) மகாராஷ்டிரா (2) கர்நாடகா (3) ஆந்திரா (4) ஒடிசா

21. கூற்று1: அலுமினியமானது, பாக்சைட் தாதுவிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. எடை குறைந்தது, கடினமானது மற்றும் விலை குறைந்தது. எனவே, கட்டுமான பணிக்கு பயன்படுத்தப்படுகிறது.

கூற்று 2: அலுமினியத்துடன் சிறிய அளவிலான பிற உலோகங்களை சேர்ப்பதன் மூலம், தூய அலுமினியத்தை விட உயர்ரக உலோகக் கலவையை (அலாயினை) உருவாக்க இயலவில்லை.

(1) கூற்று 1 சரி 2 தவறு (2) கூற்று 1 தவறு 2 சரி

(3) கூற்று 1, 2 சரி (4) கூற்று 1, 2 தவறு

22. உலகில் பாக்ஸைட் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) பிரேசில் (2) ரஷ்யா (3) ஆஸ்திரேலியா (4) கினியா

23. தமிழகத்தில் சேர்வராயன் மலையில் பாக்ஸைட் படிவுகள் அதிக அளவில் உள்ளன. இந்த சேர்வராயன் மலை எந்த மாவட்டத்தில் உள்ளது?

(1) நீலகிரி (2) திருச்சி (3) வேலூர் (4) சேலம்

24. உலகில் வெள்ளி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) மெக்ஸிகோ (2) பெரு (3) சீனா (4) ரஷ்யா

25. ______ வெள்ளியானது, உலகளவில் தென் அமெரிக்க நாடுகளில் காணப்படுகிறது.

(1) 60% (2) 50% (3) 40% (4) 30%

26. கூற்று: மாங்கனீசு, மின்சார பேட்டரிகள் தயாரிக்கவும், செங்கல், பானை மற்றும் தரைத் தளம் தயாரிப்பு மற்றும் வண்ணப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

LIVEWORKSHEETS

காரணம்: மாங்கனீசின் பொதுவான தாதுக்கள் பைரோலுசைட், மாங்கனீசு, சைலேமெலேன் மற்றும் ரோடோக்ரோஸைட் ஆகும். இது நல்ல தரமான எஃகு உற்பத்திக்கு முக்கியமானதாகும்.

(1) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.

(2) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.

(3) கூற்று தவறு, காரணம் சரி.

(4) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

27. உலகில் நிலக்கரி உற்பத்தி செய்வதில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) இந்தியா (2) சீனா (3) ரஷ்யா (4) இத்தாலி

28. தமிழகத்தில் நெய்வேலியில் எந்த வகையான நிலக்கரி உற்பத்தி செய்யப்படுகிறது?

(1) ஆந்த்ரசைட் (2) பிட்டுமினஸ் (3) லிக்னைட் (4) பீட்

29. மாங்கனீசு உற்பத்தியில் உலக அளவில் முன்னணி வகிக்கும் நாடு ______.

(1) தென் ஆப்பிரிக்கா (2) ஐரோப்பா

(3) வட அமெரிக்கா (4) தென் அமெரிக்கா

30. சரியான இணையைக் கண்டறிக:

(1) மைக்காவின் தாதுக்கள் - பைரோலுசைட், சைலேமெலேன்

(2) மைக்காவின் தாதுக்கள் - மஸ்கோவைட், பயோடைட்

(3) மாங்கனீசு தாதுக்கள் - ஹேமடைட், மேக்னைடட்

(4) மாங்கனீசு தாதுக்கள் - லிமோனிடைட், சிட்ரைட்

31. பொருந்தாத இணையை கண்டறிக.

(1) மைக்கா உற்பத்தி - சீனா

(2) மாங்கனீசு உற்பத்தி - தென் ஆப்பிரிக்கா

(3) வெள்ளி உற்பத்தி - மெக்ஸிகோ

LIVEWORKSHEETS

(4) பாக்சைட் உற்பத்தி - அமெரிக்க ஐக்கிய நாடுகள்

32. இந்தியாவில் 95% மைக்காவானது எந்தெந்த மாநிலங்களில் கிடைக்கிறது?

(1) ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் ஜார்க்கண்ட்

(2) தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா

(3) ஹிமாச்சலப் பிரதேசம், உத்திர பிரதேசம் மற்றும் ஜார்கண்ட்

(4) ராஜஸ்தான், குஜராத் மற்றும் கர்நாடகா

33. கூற்று 1: பவளப்பாறை, ஃபோராமினிப்பெரா மற்றும் மெல்லுடலிகள் போன்றவற்றின் மடிவிற்குப் பின்னர் உருவாகும் 10% படிவுப் பாறைகள் சுண்ணாம்புக் கற்களாகும்.

கூற்று 2: போர்ட்லேண்ட் சிமெண்ட் சுண்ணாம்பு கல்லிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 சரி 2 தவறு.

(3) கூற்று 2 சரி 1 தவறு (4) கூற்று 1 மற்றும் 2 தவறு.

34. உலகில் பாதிக்கு மேற்பட்ட சுண்ணாம்புக்கல் உற்பத்தி செய்யும் நாடு ______.

(1) இந்தியா (2) ரஷ்யா (3) சீனா (4) கனடா

35. 'கருப்பு தங்கம்' என அழைக்கப்படுவது ______.

(1) பெட்ரோலியம் (2) இரும்பு

(3) இயற்கை வாயு (4) நிலக்கரி

LIVEWORKSHEETS